# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதளமுகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு.மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

முறையீட்டு மனு எண். 68/மா/2024,
நாள் 18.12.2024

திரு ஆர். தினேஷ், ........................... முறையீட்டு மனுதாரர்
சென்னை.

மண்டல அலுவலர், ............................ எதிர் மனுதாரர்
மண்டலம் 5,
பெரு நகர சென்னை மாநகராட்சி.

சென்னை 600 001, மிண்ட் தெரு, கதவு எண்.65 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஆர்.தினேஷ் என்பவரின் 01.04.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.04.2024 அன்று பெறப்பட்டு 68/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சென்னை 600 001, மிண்ட் தெரு, கதவு எண். 65 என்கிற முகவரியில் வசிக்கும் திரு ஆர். தினேஷ் என்பவர் 01.04.2024 நாளிட்ட தனது மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

நான் மேற்கண்ட விலாசத்தில் மூன்று தலைமுறைகளாய் கடை நடத்தி வருகிறேன். எனது கடை அருகில் தெருவினை ஆக்கிரமித்து கடைகள் அமைத்துள்ளால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இந்த ஆக்கிரமிப்பு குறித்து 23.05.2022, 24.05.2022, 11.07.2022, 18.07.2022 மற்றும் 22.07.2022 தேதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு புகார் மனுக்கள் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே பல முறை புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத மாநகராட்சி அதிகாரிகள் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கவும், எனது மனுக்களில் குறிப்பிட்டுள்ள ஆக்கிரமிப்பு கடைகளை உடனடியாக அகற்ற உரிய உத்திரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 31.07.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் மண்டல அலுவரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5, மண்டல அலுவலர் தனது 09.12.2024 நாளிட்ட அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்ட வார்டு 54, சௌகார்பேட்டை, தங்க சாலை தெரு, கதவு எண் 65 (ராமர் கோவில் அருகில்) என்ற இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த 2 கடைகளை கடந்த 7.12.2024 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் மூலம் முழுவதுமாக அகற்றப்பட்டது என்று தெரிவித்துள்ளார். மேலும் அது குறித்த புகைப்படங்களை சமர்ப்பித்துள்ளார்.

4. இம் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 10.12.2024 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.11.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 10.12.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“எனது முகவரியில் மூன்று தலைமுறைகளாய் கடை நடத்தி வருகிறேன். எங்களது கடை அருகில் மிகவும் போக்குவரத்து நெரிசல் அடிக்கடி ஏற்பட்டு பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படுகிறது. எங்கள் தெருவில் ஆக்கிரமிப்பு கடைகள் அதிகமாக இருப்பதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது என்றும், அந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி 23.05.2022 அன்று பெருநகர சென்னை மாநகராட்சிக்கு புகார் மனு அளித்தேன். ஆனால் பெருநகர சென்னை மாநகராட்சியால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும், 24.05.2022, 11.07.2022, 18.07.2022 மற்றும் 22.07.2022 ஆகிய தேதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சியின் பல்வேறு உயர் அதிகாரிகளுக்கு புகார் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் விவரம் கோரி மனு அளித்தும் அதன் மீதும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. மீண்டும் 05.09.2022 அன்று மனு அளித்தபோது பெருநகர சென்னை மாநகராட்சியின் 54வது வார்டு உதவிப்பொறியாளர் என்னுடைய மனுவினை பெற்றுக்கொள்ளாமல் என்னை அலைக்கழித்தார். எனவே எனது மனுவில் குறிப்பிட்டுள்ள தெருவில் உள்ள ஆக்கிரமிப்பு கடைகளை அகற்ற பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

6. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவிப்பொறியளார் 10.12.2024 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

சென்னை, வார்டு 54, சௌகார்பேட்டை, தங்கசாலை தெரு, கதவு எண் 65 (ராமர் கோவில் அருகில்) என்ற இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட 2 கடைகள் (பூக்கடை மற்றும் பழக்கடை) கடந்த 07.12.2024 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் மூலம் முழுவதுமாக அகற்றப்பட்டது. அதன் விவரம் மற்றும் புகைப்படம் ஆகியவற்றினை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கிறேன். மனுதாரர் எற்கனவே 2022ம் ஆண்டு அளித்த புகார் தொடர்பாக ஆக்கிரமிப்பாளர் திருமதி சரஸ்வதி அம்மாள் அவர்களிடம் இவ்விடத்தில் பூக்கடை அமைக்க மாட்டேன் என்று உறுதி மொழி எழுத்துபூர்வமாக 27.12.2022 அன்று பெறப்பட்டது. மேலும் எதிர் காலங்களில் ஆக்கிரமிப்பு செய்யப்படின் அபராதம் விதிக்கப்படும் என்று எச்சரிக்கை

செய்யப்பட்டுள்ளது. மேலும் Vending Committee மூலம் அளிக்கப்பட்ட அடையாள அட்டை பறிமுதல் செய்யப்படும் என்று ஆக்கிரமிப்பு கடை உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார்.

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவிப்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் தனது கடை அமைந்து இருக்கும் தெருவில் பலர் கடைகள் அமைத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாகவும், அதனால் அந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி பலமுறை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் அலுவலர்களுக்கு புகார் மனு அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிவித்து தனது கடைக்கு அருகில் ஆக்கிரமித்து கடை அமைத்துள்ளதை அகற்றகோரியும், தனது மனு மீது நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்ட இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட 2 கடைகளான பூக்கடை மற்றும் பழக்கடை கடந்த 07.12.2024 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் அகற்றப்பட்டது என்பதும், மனுதாரர் ஏற்கனவே 2022ம் ஆண்டு அளித்த புகார் தொடர்பாக ஆக்கிரமிப்பாளர் திருமதி சரஸ்வதி அம்மாள் அவர்களிடம் பூக்கடை அமைக்கமாட்டேன் என்று உறுதி மொழி எழுத்துபூர்வமாக 27.12.2022 அன்று பெறப்பட்டது என்பதும், எதிர்காலத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்படின் அபராதம் விதிக்கப்படும் என்றும், Vending Committee மூலம் அளிக்கப்பட்ட அடையாள அட்டை பறிமுதல் செய்யப்படும் என்று ஆக்கிரமிப்பு கடைதாரர்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் மண்டல அலுவரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம் அறிய முடிகிறது.

இந்நேர்வில் மனுதாரர் தெரிவித்த ஆக்கிரமிப்பு குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் உதவிப்பொறியளார் தன்னுடைய வாக்குமூலத்தில், தெரிவித்தவாறு 07.12.2024 அன்று சென்னை மாநகராட்சி அலுவலர்களால் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது என்பதை ஏற்று, இனி வருங்காலங்களில் பொது பாதையினை எதிர்காலத்தில் ஆக்கிரமிப்பு செய்தால், உரிய நடவடிக்கை மேற்கொண்டு Vending Committee மூலம் வழங்கப்பட்ட அடையாள அட்டையை பறிமுதல் செய்யவும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ன் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. பொது மக்களின் புகார் மனுக்களுக்கு உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுகிறது.

2024 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்,

1) திரு ஆர். தினேஷ்
எண் 65, மிண்ட் தெரு (ராமர் கோவில் அருகில்),
சென்னை 600 001.

2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை 600 003.

3) மண்டல அலுவலர்,
மண்டலம் 5,
எண் 61, பேசின் பாலம் சாலை,
சென்னை 600 021

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை 28.

5) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 28

<u>நகல்</u> : மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ. / உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).